| Publication : Makkal Kural | Edition : Chennai |
|---|---|
| Date : April 16, 2020 | Page: 7 |

# வீட்டிலிருந்தே ஆன்லைனில் டெபாசிட், சேமிப்பு கணக்கு துவக்கும் வசதி : ஈக்விடாஸ் சிறு நிதி வங்கி துவங்கியது

சென்னை, ஏப்.16–

ஈக்விடாஸ் சிறுநிதி வங்கி நிறுவனம் ஊரடங்கு அமலில் இருந்துவரும் நிலையில் வங்கிக் கிளைகளுக்கு நேரடியாகச் செல்ல முடியாத சூழல் உருவாகியுள்ளது. டிஜிட்டல் பேங்கிங் மூலமாக புதிய வாடிக்கையாளர்கள் தாங்களே வைப்புத் தொகை மற்றும் சுய சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கும் என்று தலைமை செயல் அதிகாரி பி.என்.வாசுதேவன் தெரிவித்தார்.

வாடிக்கையாளர்கள் தங்களது ஆதார் எண் மற்றும் பான் எண் பயன்படுத்தி, ஆன்லைன் மூலமாக ரூ. 90 ஆயிரம் வரை தாங்களே வைப்புத் தொகை கணக்கைத் தொடங்கலாம். அதன்பின், நிலையான வைப்புத் தொகையை ஆன்லைனில் மூன்றே நிமிடங்களில் பதிவு செய்யலாம்; அதோடு, ஆண்டுக்கு 7.75% என்னும் வட்டி விகிதத்தில் ஓராண்டுக்கு திரும்பப் பெறலாம்.

எளிதாக, சிரமம் ஏதுமின்றி வீட்டில் இருந்தவாறே நிலையான வைப்புத் தொகை பதிவு செய்யலாம். ஒருங்கிணைந்த கட்டண பயன்பாட்டு தளம் (யுபிஐ) மெய்நிகர் கட்டண




முகவரி (விபிஏ)மூலமாக இந்தியாவின் எந்த பகுதியிலும் உள்ள ஈக்விடாஸ் வங்கியில் (யுபிஐயில் இணைக்கப்பட்ட) செலுத்தலாம்.

பரிமாற்றம் செய்யும் வசதியும் உண்டு. வழக்கமான அம்சங்களைத் தாண்டி சில குறிப்பிட்ட அம்சங்களைக் கூடுதலாகச் சேர்த்து வடிவமைக்கப்பட்டுள்ளது சுய நிலையான வைப்புத் தொகை.

அந்தந்த நேரத்துக்கு ஏற்றவாறு வட்டி விகிதம் மாறும். நிலையான வைப்புத் தொகைபதிவு செய்யும் முன்பாக சமீபத்திய விகிதங்கள் பற்றி அறிய வாடிக்கையாளர்கள் எங்களது www.equitasbank.com இணையதளத்தைப் பார்க்கலாம்.

சுய சேமிப்பு கணக்கு என்பது டிஜிட்டல் வழியில் ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்கு ஆகும். இணையத்தில் வீடியோ வடிவில் விண்ணப்பத்தைப் பதிவு செய்து, அதில் ஆதார் எண், பான் எண் மற்றும் இதர விவரங்களைத் தருவதன் மூலமாக கணக்கைத் தொடங்கலாம். வாடிக்கையாளர்கள் மொபைல் பேங்கிங் பின் உருவாக்கி, உடனடியாகத் தங்களது கணக்கைப் பயன்படுத்தத் தொடங்கலாம். குறைந்தபட்ச இருப்பு இல்லாமல், மெய்நிகர் பற்று அட்டையுடன் ஆண்டுக்கு 7.5% வரையிலான வட்டி விகிதத்தைக் கணக்கு தொடங்கியவர்கள் பெற முடியும். வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் கேள்விகளுக்குத் தீர்வு பெற, செயற்கை நுண்ணறிவு வாடிக்கையாளர் சேவை மென்பொருளை அணுகலாம் என்று ஈக்விடாஸ் சிறுநிதி வங்கி இந்தியக் கிளை தலைவரான முரளி வைத்தியநாதன்தெரிவித்தார்.